கடவுள் துணை.

யூகிமுனிவர் அருளிச்செய்த

# சுருக்கம் நூறு.

இதை
சுதேசவைத்தியர்களின்உபயோகத்திற்காக,
யூநாநி வைத்திய போதினி முதலிய
பல வைத்திய நூற்களின்
கிரந்தகர்த்தாவாகிய
ஹக்கீம்
பா. முஹம்மது அப்துல்லா சாயபு
அவர்கள் சிலஅநுபந்தத்துடன்
அச்சிட்டனர்.

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலை

THIRD EDITION.

1915ஞு

Copy right.

கைவிலை ரூ 0-3-0 வி. பி. ரூ 0-5-0.

# கவனிப்பு.

தற்காலத்தில் கடுதாசியின் விலையும் அச்சுக்கூலியும் அதிகரித்துவிட்டபடியால் இதன் விலையும் மூன்றணா வாக்கப்பட்டிருக்கிறது. நண்பர்கள் ஆக்ஷேபனை செய்யாமல் தயவுடன இதிற் கண்ட விலைக்குப்பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்.

அக்கீம்-பா-மு-அ.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:—"யூகிமுனிவர் சுருக்கம் நூறு" என்ற இக்கிரந்தம் ௧௮௬௭௵(௨௫-வது) ஆக்டின் (௨௰-வது)பிரிவில் (௬-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது இதைவேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஹக்கீம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு அன்ஸன்ஸ்.

12 அப்புமேஸ்திரி தெரு,

ஜார்ஜ்டவுன், சென்னை.

# விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற எம்முடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்; அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக்கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும்தக்கவெகுமதி கொடுக்கப்படும்.

ஹக்கிம் பா-முகம்மது அப்துல்லா சாயபு அன்ஸன்ஸ்.
12. அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

## புத்தக விளம்பரம்.

இதனடியிற்கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை மாபூஸ்கான்தேவடி, அப்புமேஸ்திரிவீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம் பா-முகம்மது அப்துல்லா சாஹிபு அவர்களிடத்தில்கைவிலைக்கும், வாலியு பேயபல் போஸ்ட் மூலமாகவும் இதனடியிற்கண்ட விலை விகிதப்படி பெற்றுக்கொள்ளலாம்.

### யூநானி வைத்திய புத்தகங்கள்.

| | ரூ. | அ. | ப |
|---|---|---|---|
| யூநானி வைத்திய தாருட்யவிருத்திபோதினி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 2 | 0 | 0 |
| ஷை திறவுகோல் | 0 | 10 | 0 |
| ஷை நான்காம்பாகம் | 1 | 0 | 0 |
| யூநானி சிகிச்சா சாரசங்கிரகம் முதற்பாகம் (சிரோரோக நிவாரணபோதினி) | 1 | 5 | 0 |
| யூநானி சிகிச்சாசார சங்கிரகம்இரண்டாம் பாகம்(நயனரோக நிவாரணபோதினி) | 1 | 5 | 0 |
| யூநானி சூக்ஷ்மசிகிச்சாபோதினி 1ம்பாகம் | 1 | 2 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 1 | 2 | 0 |

### அநுபோக வைத்திய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அநுபோகவைத்திய நவநீதம்முதற்பாகம் | 1 | 0 | 0 |
| அநுபோக வைத்திய நவநீதம் இரண்டாம்பாகம் | 1 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம்பாகம் | 1 | 0 | 0 |
| நான்காம் பாகம் | 1 | 0 | 0 |
| ஐந்தாம்பாகம் | 1 | 2 | 0 |
| ஆறாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஏழாம்பாகம் | 1 | 0 | 0 |
| எட்டாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஒன்பதாம்பாகம் | 1 | 0 | 0 |
| பத்தாம்பாகம் | 1 | 0 | 0 |
| அகத்திய மகாமுனி அருளிச்செய்த மகாதிராவகம் எண்ணூறு | 1 | 0 | 0 |
| பிரமேக நிவாரணபோதினி | 0 | 12 | 0 |
| கிராவக நிவாரணபோதினி | 0 | 13 | 0 |
| ஆயுர்வேத சிரோமணியென்னும்வைத்திய சிந்தாமணி முதற்பாகம் | 0 | 14 | 0 |
| சரபேந்திர மேக நிவாரணபோதினி | 1 | 0 | 0 |
| சரபேந்திர கபமருந்து மஞ்சரி | 0 | 8 | 0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா மூலமும் உரையும் முதற்பாகம் | 1 | 5 | 0 |
| இராஜ வைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகை யமகவெண்பா மூலமும் உரையும் இரண்டாம்பாகம் | 1 | 5 | 0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா மூலம் | 0 | 6 | 0 |
| தன்வந்திரி சூக்ஷும வைத்தியம் | 0 | 5 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத்தமிழ் | 1 | 4 | 0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1 | 4 | 0 |
| தேரையர்வைத்திய மகரிசல் | 0 | 10 | 0 |
| மூலரோகச் சிகிச்சாபோதினி | 1 | 0 | 0 |
| வைத்தியத் திருப்புகழ் | 0 | 12 | 0 |
| விஷபேதி நிவாரணி | 0 | 4 | 0 |
| பிளேக் சிகிச்சாபோதினி | 0 | 8 | 0 |
| கடுக்காய்ப் பிரபாவபோதினி | 0 | 2 | 0 |
| போகரேழாயிர சூஸ்திர மெழுநூறு | 0 | 12 | 0 |
| வீரமாமுனி வாகடத்திரட்டு முதற்பாகம் | 1 | 0 | 0 |
| வீரமாமுனி வாகடத்திரட்டு இரண்டாம் பாகம் | 1 | 0 | 0 |
| அகத்தியமாமுனி வைத்தியஅந்தாதி | 1 | 0 | 0 |
| வல்லாரைப் பிரபாவ போதினி | 0 | 8 | 0 |
| சதசுலோகமென்னும் வைத்திய சதகம் | 0 | 12 | 0 |

### வாத வைத்திய கிரந்தங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இரசவாதசிந்தாமணி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| இரசவாதசிந்தாமணி இரண்டாம்பாகம் | 1 | 5 | 0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1 | 8 | 0 |
| அகஸ்தியர் பள்ளு | 1 | 2 | 0 |
| இரசவாத மஞ்சரி | 1 | 2 | 0 |
| இலக்க சௌமியசாகரம் முதற்பாகம் | 1 | 0 | 0 |
| இலக்கசௌமியசாகரம் இரண்டாம்பாகம் | 0 | 14 | 0 |
| இலக்கசௌமியசாகரம் மூன்றும் பாகம் | 0 | 14 | 0 |

| | | | |
|---|---|---|---|
| இலக்கசௌமியசாகரம் நான்காம்பாகம் | 0 | 14 | 0 |
| இலக்கசௌமியசாகரம்ஐந்தாம்பாகம் | 1 | 0 | 0 |

## மேஸ்மரிஸ புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஹிப்னடிஸம் என்னும்மனோவசியதத்துவம் | 2 | 0 | 0 |
| அப்பியாச சக்கரம் | 0 | 5 | 0 |
| மானிடவசியம் | 2 | 8 | 0 |
| ஹிப்னடிஸத் தட்டு | 0 | 8 | 0 |
| ஞானதரிசனக்கண்ணடி | 1 | 0 | 0 |
| பர்ஸனல் மாக்னடிஸம் | 2 | 0 | 0 |
| மெஸ்மரிஸபாடங்கள் | 2 | 0 | 0 |
| சுவாசமேஉயிர் | 1 | 0 | 0 |

## இதர புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பண்டிதை மெஸ்மரிஸா | 1 | 0 | 0 |
| உலக அதிசய விளக்கம் | 0 | 8 | 0 |
| ஞாய அஷ்டாங்கதீபம் | 0 | 4 | 0 |
| அசன்பேசரித்திரம் | 0 | 8 | 0 |
| சந்திரகாசனை சாமர்த்தியத்தால் விழுங்கிய தாசி | 0 | 2 | 6 |

ஹக்கீம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு அன்ஸன்ஸ்.

12. அப்புமேஸ்திரி தெரு,

ஜார்ஜ்டவுன், சென்னை.

கடவுள் துணை.

# யூகிமுனிவர் அருளிச் செய்த

## சுருக்கநூற்றின் முகவுரை.

இரசவாத சாஸ்திர சகோதரர்களே ! இச்சிறிய கிரந்தத்தை யச்சிட நேரிட்டகாரணம் பின் வருகிற விதமாம்.

அடியேனால் வெளிப்படுத்தப்பட்ட இரசவாத சிந்தாமணியின் முதல், இரண்டாம் பாகங்களாகிய இரண்டையும் வாங்கி, அவற்றிற் சொல்லப்பட்ட நானாவித முறைகளையும் ஆங்காங்கு கண்டிருக்கிற வகை விபரத்துடன் செய்து சித்திபெற்று ஆனந்தித்து வரும் நண்பர் பலர், கடிதமுகத்தானும் பிறவாற்றானும் அதை எமக்கறிவித்து ஷ இரசவாதசிந்தாமணியின் மற்றப் பாகங்களையும் கூடிய சீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்தும்படி வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் அடியேனுக்கு அடிக்கடி நேரிடும் பற்பல வகையான குடும்பத்தொல்லையாலும் வேறுவகை அசந்தர்ப்பங்களாலும், எம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்துவரும் கனவான்களின் கோரிக்கையை அவர்களிஷ்டப்படியுடனுக்குடன் நிறைவேற்ற தடைப்படுத்தப் பட்டவனாயினும், கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், பற்பலபண்டித சிரோன்மணிகளின் அநுக்கிரகத்தாலும் மேற்கண்ட மற்றப் பாகங்களையும் வெளிப்படுத்துவதற்காம் பிரயத்தினங்களிலேயே கவலையுள்ளவனாய் முயற்சிசெய்து வருகின்றேன். ஆனால், இதற்கிடையில் இரசவாத சாஸ்திரத்தில் அநுபவசித்தி மிகுந்த ஒருபெரியவரின் தரிசனங்கிடைத்தது. இரசவாதசாஸ்திரத்தில் அவருக்கிருக்கும் பாஷா ஞானம்; வியாக்கியான ஞானம், கைபாகம் செய்பாகம், புடபாகம் முதலியவைகள் மிகவும் வியக்கத் தக்கவைகள். அம்மகான் இவ்வேழை மீது கிருபையும் பக்ஷமு முள்ளவராய் அதிகப் பிரியத்துடன் அன்பு பாராட்டி வந்தனர். அவர் அதிக சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் இரசவாத சாஸ

திரத்தில் சுருக்கமானவும், கூடியவரையில் தெளிவாகவும் தங்களுக்கனுபவமானவும் ஒருநூலை வெளிப்படுத்தினால் அந்தச்சாஸ்திரத்திற்பழகிவருபவர்களுக்குப் பிரயோசனமாயிருக்குமெனப் பிரேரேபித்தேன். அந்தமகான் அடியேன் வார்த்தையை யுடனேயாமோதித்துப் பின்வருகிறபடி சொல்லி யிதனை யநுக்கிரகஞ் செய்தனர்.

இதிற் சொல்லப்பட்ட முப்பூ முறைகள் தமக்குக் கைவல்லியமானவைகளாம். உண்மையான மஹான்கள் பலரிடமிருந்து கைபாகத்துடன் தெரிந்துகொண்ட குருமுறைகள் இச்சிறுகிரந்தத்திற் சொல்லப்பட்டவைகளேயாம். இச்சுருக்கத்தில் தெளிவாயும், விபரமாயும் சொல்லி யிருப்பதுபோல வேறெந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லையாம். பல சாஸ்திரங்களிலும் அவை பரிபாஷையாகவே சொல்லப்பட்டிருப்பதால் அவற்றை எல்லோரும் அறிந்துகொள்வது துர்லபமாம்; அப்படிக்கில்லாமல் இச்சிறு நூலில் மறைவின்றித் தெரியும் விதமாய்ச் சொல்லப்பட்டு அநுபவத்திற்கும் ஒத்திருப்பதால், லோகோபகாரமாயிருக்கும்படி இந்தச் சாஸ்திரத்தை யச்சிட்டு வெளியிட அடியேனுக்குக் கட்டளையிட்டனர். அவர் கருத்தின்படியே இதனை வெளியிடலாயிற்று. இதிற்சொல்லப்பட்ட முறைகள் மகா உன்னதமானவைகளாகவே காணப்படுகின்றன. ஆனால் இவ்விஷயத்தில் அநுபவசித்தி பெற்றவர்கள் இதன் உண்மையை யறிந்துகொள்வார்கள்.

ஆகையால், லோகோபகாரச் சிந்தையுள்ள இம்மகானுக்கு அடியேன் இருதய பூர்வமாக நன்றியுள்ளவனாயிருப்பது போலவே, இதனைக் கைக்கொண்டு, ஆழ்ந்தகருத்துடன் கையாண்டு அநுபவசித்திபெறும் ஒவ்வொருவரும் அப்படியே நன்றியுள்ளவர்களாயிருக்கும்படி சர்வதயாபரக் கடவுள் உதவி புரிவாராக; ஆமீன்.

கடவுள் துணை.

# முப்பூவின் பெயர்.

வழலை, அண்டம், பிண்டம், இடைகலை, சுழிமுனை, பின்கலை, அம்பு, எரி, பரிதி, மதி. வில், அரிதாரம், இடி, இரண்யகர்ப்பம், இறையம், கோசம், கௌரி, தனித்தியம், பீசம், மேகம், வாயு, அமுரி, உரி, உவர், உவர்மண், கடுக்காய், கிகை, சுண்ணம், தசைநஞ்சு, திரிகுணஜலம், நஞ்சு, நாதம், பாஷாணம், பூமிநாதம், வயிரம், விந்து, அடி, அமாவாசை, அரக்கி, ஊனுப்பு, ஐம்பத்தொன்று, கணபதி, கம்பி, கருநெல்லி, கிரகம், குயவன், கொள்ளி. நடு, நவமூலி, நீருப்பு, பிரதமை, பூநீர், மிதுனம், முடி, மேடம், லவணம், வண்ணலை, விஷமி, விஷம், வெடியுப்பு, வெண்சாரை, அஞமி, எழுபிறப்பு, ஐவர், ஓசை, கண்மணி, கதிர், கமலம், கமி, குடிபோம்வீடு, கூற்றன், சாரி, சிங்கி, சுடர், சுட்டல், சுயம்பு, சூடன், நாயகம், நிலப்பூடு, நீரன்னம், பச்சை, படிகம், பண்ணை, பரமன், பிடாலவணம், புஷ்டி, பொட்டல், மடையன், மணற்பொடி, மலம், மவுனம், மாசி, முயல், லிங்கம், விஷ்ணு, கெடி, வெளி, அக்கினிக்கட்டி, அங்கி, அயம், அவுரி, இந்திரகோபம், இரசம், இராசவர்க்கம், உரம், உருளை, ஏகசவுக்காரம், ஏமம், ஒளி, கடலிற்பாசி, கண்டங்கத்திரி, கண்ணாடி, சுத்தம், கரடு, கரந்தை, கரும்பூனை, கருவி, குளிச்சுண்ணம், கனல், கனல்மேலுப்பு, கன்னி, கன்மம், காரீயம், காவி, குங்குமம், குரு, குருத்து, கொக்கு, கொச்சி, கொடி, கொன்றை, கோதை, கோமயம், கோரோசனை, சங்கமம், சங்கு, சங்கியாசிமண்டை, சமாதி, சாபீசம், சாளக்கிராமம், சிங்கு, சுக்கான், சுத்

தம், சூக்மம், சூலம், சொறி, சோடம், சோதி, சோ
மநாதம், தலைப்பிள்ளை, தாறு, திருமேனி, துக்தி, து
ருசு, தூலம், தேர்க்கால், தொட்டி, நட்டோடு, நந்தி,
நாகட், நிலவுப்பு, பஞ்சமித்திரம், படலம், பரம், பரி,
பாலைநிலம், புத்தான், புரியட்டம், புனுகு, பூரம், பூர்
ணம், பொன்னாமத்தைவித்து, மரம், மதனப்பூண்டு,
மதி, மந்திரம், மலைருது, மின், மீனம், முட்டை, மூத்
தான், யானைக்கல், ரவி, வங்கு, வலியான், வள்ளி, வா
சி, வியாக்கிரம், விருட்சம், வெண் கண்டர், வெண்கா
ரம், வெள்ளையாரை, என்னும் இவை தொண்ணூற்றா
று நாமங்களாம்.

## தீக்ஷை நீரின் பெயர்.

அண்டநீர் அகாரநீர் அப்பு அமுதம் அமுரி அரு
க்கன்பால் அறுவகைநீர் ஆற்றுவெள்ளம் இளங்குமரி
நீர் உகாரநீர் உதகம் உப்புநீர் ஊசிநீர் ஐவிரலிநீர் ஓகா
ரநீர் கங்கை கருநீர் கல்நீர் கவந்தநீர் கழுதைநீர் கள்ளு
கன்னிருது காக்கைநீர் காந்தமலரொட்டிநீர் காரநீர்
கிளிஞ்சிநீர் குதம்பைநீர் கும்பிடுகல்நீர் குருதி கெங்
கைநீர் கெர்ப்பநீர் சத்திநீர் சம்பளச்சாறு சரஸ்வதி
தீர்த்தம் சருகுநீர் சாராயம் சிப்பிநீர் சிவதீக்ஷைநீர்
சுத்தகங்கை சுரோணிதம் சுண்ணநீர் செந்தேன் ஜெப
நீர் சையோகநீர் சோடசநீர் சோமநீர் சோரி தசமநீர்
தண்ணீர் தயிலம் தாளிச்சாறு திராவகம் திரிபுரை
நீர் தூபநீர் தூமை நத்தநீர் நவச்சாரநீர் பனிநீர் நா
தம் பாளைநீர் பஞ்சதீக்ஷைநீர் பழச்சாறு பிரணவநீர்
பிரவாகம் புகைநீர் புவனை பூச்சாரநீர் போகாப்புனல்
மதநீர் மதிநீர் மது முலைநீர் முன்துளிர்நீர் மூலப்புளி
நீர் மேனிப்பால் வண்டு வஸ்துநீர் வாலைநீர் வெண்ணீர்
வேசரிநீர் வேர்வை யோகதீக்ஷைநீர் ரீங்காரநீர் முதலி
வைகளாம்.

கடவுள் துணை

## யூகிமுனிவர் அருளிச்செய்த

## சுருக்கம் - நூறு.

---

ஆதிசிவன் தன்பாத முமையாள்பாதம் ஆதியாம் கணேசனுடன் முருகன்பாதம், வாதியாம் பதினெட்டுச் சித்தர்பாதம் வடிவான ரிஷிபாதம் போற்றி செய்து, நீதியாய்ச்சகலநூல் தன்னைத்தானும் நிர்ணயமாய்த்திரட்டியே யிந்தநூலைப், பாதிமதி யணிந்தபர னருளினாலே பகர்ந்திட்டேன் பார்த்திட்டால் வாதமாமே.

வாதமே சிவன்தானுந் தேவிக்குச் சொல்ல வகையானதேவிதா னந்திக்குச்சொல்ல; நீதமாய் நந்திதான் அசுவினிக்கு நிச்சயமாய்ப் போதிக்க வவர்கடானும், காதலாய்விசுவனுக்கு முபதேசிக்க கசடன்றி அகஸ்தியரும் புலஸ்தியர்க்கு. வேதமாய்ச் சொல்லிவிட்டார் புலஸ்தியர்தானும் விநோதமா யுட்கொண்டார் கருத்தாற்றானே. (உ)

கருத்தாகப் புலஸ்தியரும் தேரையர்க்குச்சொல்லக் கனிவானதேரையரும்சந்தோஷித்து,பெருத்தாக யூகிமுனிக் குபதேசித்தார் பெருமையா யுலகத்தோர் பிழைக்க வேண்டி, நறுத்தாகவாயுர்வே தத்தைத்தானும் நலமாகத் தீக்ஷைவிதி யைந்நூற்றுக்குள், உரித்தாகப்பாடினே னுவமையாக வுண்மையிது வென்னூலையுகந்துபாரே. (௩)

உகந்துபார் வாதகாண்டம் ரெண்டிற்றானும் உகமையாய்க்களங்குவகை லகுவாய்ச்சொன்னேன்,பகர்ந்

துபார்தீக்ஷைவிதி யைந்நூற்றுக்குட் பதிவாக சவுக்காரச் சுண்ணம்சொன்னேன், தகுதிபார்சவுக்காரச்சுண்ணம்வைத்துத் தக்கதொரு களங்குவகை செந்தூரங்கள், தொகுதிபார்சேர்த்துரைத்தால்வாதமாகும் துடியாகப்பாகமதைச் சரியாய்ப்பாரே. (ச)

பாகமாய்ச்சவுக்காரச் சுண்ணத்தோடு பதிவான கல்லுப்புச் சுண்ணமாக, ஆகமாய்க் களங்குவகை சிந்தூரமார்க்கம் அடைவான திராவகமும் கெந்திச்செம்பு. யோகமாய்க்காரீயச் செம்புமார்க்கம் உண்மையாய் நாகத்தின் ஜெயநீர்மார்க்கம், பாகமாம் சங்கத்தின் திராவகத்தின்மார்க்கம் பரிவாக வெடுத்துமே சொல்வேன்பாரே. (ரு)

சொல்லவே யவரெல்லா மோதலாச்சு சுகமான சவுக்காரச் சுண்ணத்தாலாச்சு, மெல்லவே தூர்த்தருக்குத் தோன்றுதப்பா, விரும்பினனினவுக்குள் வந்துதோயும், கல்லவேசவுக்காரச் சுண்ணத்தாட்டுக்கனிவான் சதாசிவனும் காணார்காணார், நல்லவே நந்தியுமே கேட்டுக்கொண்டார் நான்கண்டு தீக்ஷையிலே சொன்னேன்பாரே. (சா)

பாருமே சித்தரெல்லாஞ் சவுக்காரத்திற் பதிவானபூநீரை யளந்துவிட்டு, நேருமே மூத்திரத்தை யூற்றச்சொல்லி நிலவரமாயெண்ணெய்விட்டுச்செய்யச்சொல்லி, காருமேசுண்ணத்திற் குளிக்கச் சொல்லிக்கனிவுபெற மறைவாகச் சொல்லிப்போட்டார், நாறுமே சவுக்காரங் கெட்டுப்போச்சு நலமானவழலையென்றநாமம்போச்சே. (எ)

நாமமென்ன சொல்லுகிறேன் பூமிநாதம் நலமா
னமுதல்வழலை சுக்கானுச்சு, காமமென்ன வதிலிருந்து
பூநீர்வந்த காரணத்தாற்சவுக்காரச் சுண்ணமாச்சு, வா
மமென்னசுக்கானை நீற்றுப்போட வகையாகக் கடுஞ்சு
ன்னம் சுக்கான்சுன்னந், தாமமென்னபூநீரில் சேர்ந்த
போதே தடையறவேவெகுகார மாச்சுதானே. (அ)

ஆச்சுதேமாதவிடாய்முறிந்துபோச்சு அப்பாலே
சொல்லுகிறேனுற்றுக்கேளு, வாச்சுதேகல்லுப்பில் சே
ர்ந்தபோது வகையான கல்லுப்பும் கொடிய சுன்னம்,
தாச்சுமேசரக்கெல்லாம் நீற்றுக்கட்டும் தடையன்றிவா
தமெல்லா மேவல்கேட்கும், காச்சுதே அத்திமரம்போ
லேயாகுங் கனிவானவாதந்தான் கைக்குள்ளாமே. (௯)

## வழலை.

உள்ளாக வழலையொன்று சொல்லக்கேளு உற்று
மேபார்த்திடவே சித்தியாகும், கள்ளமேயில்லையையா
சொல்லக்கேளு காரியமாம் லகுவாகு, மிதுதான்பாரு,
துள்ளமாம் வெயிலுக்குள் பூமிநாதம் துடியாக வகை
வகையாய்ப் பொங்கிநிற்கும், உண்மையாய்மஞ்சளிலே
சிவந்துபோகு முடிவானபூனீரு பூர்க்கும்பாரே. (௰)

பூர்க்குமாம் சித்திரைவை காசிக்குள்ளே பூரண
மாம் வெகுசுறுக்கு பூர்க்கும்பாரு, ஆர்க்கமாம்பூனீரு
பதக்குவாரி யன்பாகச்சுக்கானை யூதிக்கொண்டு,எர்க்க
வேசுக்கானீர் பதக்குவாரி யெழிலானபாணிதா னெட்
டிரட்டி, தார்க்கமாயூத்தியே சுக்கானைத்தான் தடைய
ற்றூதியே கரைத்துக்கொள்ளே. (௧௧)

கரைத்துமே பூனீரும் போட்டுப்பாரு கனிவாகக் கொதியிட்டுத்திரிநாள் வைத்து, நரைத்துமே தெளிவை த்தான் பார்க்கும்போது நலமாக மஞ்சள்போற்றேன் றும்பாரு, நரைத்துமேதெளிவிறுத்துப் பீங்கானிலிட் டுநலமானகுழம்பாகக் காய்ச்சிக்கொண்டு, தரைத்து மேசல்லுப்புப் பலமும் நாலு தடையறவே யெடுத்து மேசொல்லக்கேளே. (கஉ)

## கல்லுப்புச் சுன்னம்.

சொல்லவே கல்லுப்புக் கட்டியாகச்சுருதியாய்ப் பலம்நாலு எடுத்துக்கொண்டு, நல்லவே சுண்ணும்பு படியிரண்டு நலமானசட்டியிலே பாதியிட்டு, கல்லவே யதின்மேலே கல்லுப்பை வைத்துக் கனிவாகவதின்பே ரில்சுன்னமூடி, வல்லவேயதின்பேரில்சட்டியாலே வள மாகமூடியே சொல்லக்கேளே.. (கங)

கேளுமேபெரும்புடமாய்வைத்துப்பாரு கிருபை யாய்க் கல்லுப்பின் கசிவுபோகும், ஆளுமே கல்வத்தி லிட்டுக்கேளு அடவான சவுக்காரக் குழம்பை விட்டு, தாளுமேயரைத்துமே வில்லைதட்டித் தடையறவேயுல ரவைத்துத் தாக்கக்கேளு, மாளுமேகற்சுன்னம் கீழ்மே லிட்டு மதிப்பாகவைத்தெருவிற் புடத்தைப்போடே.

போட்டுமே பார்த்தவுடன் வெள்ளையாகும் போ க்கோடேசவுக்காரக்குழம்பைவிட்டு, காட்டுமேயரைத் தரைத்துமுன்போற்போடக் கடுமையாம்முப்புவென்ற பேருமாச்சு, வாட்டுமே சகலதுறை யிதுக்குள்ளாச்சு வகையாகநீற்றினமு மிதுவேயாச்சு, தாட்டுறவே சவுக் காரமிதுவேயாச்சு தடையறவே வழலையென்ற சுன்ன மாச்சே. (கடு)

சுன்னமென்ற சவுக்காரச்சுன்னத்தோடுசுகமாகவீ
ரத்தைநாலுக்கொன்று, கள்ளமாய்ச் சேர்த்தரைத்துக்
கொள்ளத்தானும் கிளிகூறரத்தம்போற் சிவந்துகாணு
ம், நள்ளமாய்க்காய்ச்சினதோர் குழம்பினாலே நலமாக
விட்டரைத்து வில்லைதட்டிப்,பின்னமாய்க் கற்சுன்னம்
கீழ்மேலிட்டுப் பிசகாமற்புடம்போட்டு மெடுத்துப்பா
ரே. (௧௬)

எடுத்திடவே யிப்படியே யைந்துதிறம்போட வி
தமானவீரத்தைச் சேர்த்துச்சேர்த்து, அடுத்துமே பு
டம்போட்டு மெடுத்துக்கொண்டு அடவாகசவுக்காரங்
கடுமையாச்சு, கடுத்துமேகடுங்கார மெத்தவாகும் கன
மான சவுக்காரச் சுன்னத்தாலே, விடுத்துமேசகலமுந்
தான் சுன்னமாகும் விதமானசுன்னத்தின் போக்கைக்
கேளே. (௧௭)

போக்கென்ன சொல்லுகிறேன் பேறுமெத்த பெ
ருமையாய்ச்சவுக்காரம்பலமெடுத்து, வாக்கென்னசொ
ல்லுகிறேன் நாலத்தொன்று வகையானவீரத்தை நிறு
த்துப்போடு, நாக்கென்னசொல்லுமே சொல்லக்கேளு
நலமான சவுக்காரக் குழம்பினாலே, தாக்கென்னவரை
த்துமே வெள்ளீயத்தில் தடயறவேபலத்தகட்டிற் கவ
சங்கட்டே. (௧௮

கட்டியேகாயவைத்துப் புடமேபோடக் கனமான
வங்கமது நொறுங்கிப்போகுந், தட்டியேயெடுத்துமே
கல்வத்திலிட்டுத் தடயறவே சவுக்காரக்குழம்பினாலே,
முட்டியேயரைத்துமே மூன்றுபுடம்போட முயற்சியா
ய் வெள்ளீயஞ்சுன்னமாகும், வட்டியேவெள்ளீயச்சுன்
னத்தாலே வகையானதுரிசுதா னீறும்பாரே. (௧௯)

நீறான வெள்ளீய நீறுநாலு நிலையானவீரமது ஒன்றுகூட்டி, ஆறான சவுக்காரக்குழம்பினாலே அதட்டியேயரைத்துமே துரிசுமேலே, காறாகக்கவசமிட்டு ரவியிற்காய கனமானகுக்குடத்திற் புடத்தைப்போடு, தாறாகக் கடுஞ்சுன்னந் துரிசுமாகும் தடையறவே பசிக்காத சுன்னமாச்சே. (உ௧)

சுன்னமாமதயானை சுன்னமாச்சு சூக்ஷமமாம் யானையென்ற சூதராஜன், நன்னயமாய்க்கட்டியே மணியுமாகும் நலமானவாதந்தான் ஏவல்கேட்கும், கன்னல்போற்றலைக்கமுது கைக்குள்ளாகும் கனமான வாதவித்தை வெளிதிலாகும், இன்னிலத்திற் பெரியோராயிருந்துவாழ்வா ரிதமானதுரிசியினா லெல்லாமாமே.

ஆமென்று துரிசிநீர்பணவெடையெடுத்து அன்பாகவிராலியிலை தன்னிலிட்டுக், காமென்று பிசைந்துமே மூன்றுநாள்வைத்துக் கனிவாகப் பிசைந்துவரக் கரண்டியிட்டுத், தாமென்றுசூதமதுபலமுமிட்டுத்தாக்கியே ஓடவே காச்சிப்போடு,வாமென்ற விட்டலிபோற் சூதமாகும் வடிவானசூதத்தின் மார்க்கங்கேளே. (உஉ)

மார்க்கமாய்மத்தங்காய் தன்னில்வைத்து மயமாகப்புடம்போட மதியைப்போல, ஏர்க்கவே கரியிலிட்டேயுருக்கிப்பாரு இதமானகரியினின்றேயுருகியாடும், ஆர்க்கமா யெடுத்துமே வைத்துக் கொண்டு அடைவாகவாதத்தை யறியக்கேளு, வேர்க்கவே தங்கமொன்று நாகமொன்று விருப்பமாயுருக்கியே முகத்திற்றானே.

தானேதான்பூதமொன்று கொடுத்துருக்குத் தப்பாமற்களங்காகும் செம்புநூறில், வானேநீயொன்றிடவேமாத்துபத்து வகையானவாதந்தான் இதுவேமார்க்

கம், கானேதான்சிந்தூரம் பண்ணியுண்ணு காயசித்தி யேமசித்தி கணத்திலாகும், தானேதான்வினைப்பிருந்து செய்யவேணும் தடையற்ற சிறுபிள்ளை யாகும்பாரே.

பாருமே வழலைவிட்டால் பூநீர்தானும் படியாகபூநீரின் எண்ணெய்போகா, காருமே படிப்படியா யேற மாட்டார் கனமானகுருமுறையும்செய்முறையுமில்லை, வாருமே பேய்க்கூத்தால் சுட்டுக்கெட்டு வடிவானவடியினின்று நத்தியேறு, தாறுமேநுணிமரமே யேறித்தேருதாக்குமேவழலைவிட்டால் விழலாய்ப்போமே. (உரு)

விழலாகப்போகாமல் வழலைப்பாரு விருப்பமாய்ப் பின்னுமேலே பூநீர்பாரு, அழலாகவதின்பின்னே வங்கம்பாரு அடுத்துமேயதின்பின்னே துரிசுபாரு, கிழலாகவதின்பின்னே சூதம்பாரு கிலேத்துமேயதன்பின்பு தங்கம்நாசம், தழலாகக்களங்காகும் எடுத்துக்கொள்ளு தாக்கிடவேதங்கமாம் செம்புதானே (உசு)

தானென்ற சவுக்கார வழலையின்பேர் தப்பியே தெரியாமற் போனூர்கேளு, வானென்று வண்ணானைக் கேட்டுக்கொள்ளு வடிவான வண்ணான்தான் சொல்வான்பாரு, ஊனென்ற உவர்மண்ணும் சுன்னமென்பான் உற்றுமேயிவைரெண்டு மெடுத்துக் கொள்ளு, கானென்றநீற்றினங்கள் வந்தபோது கடுமையா மிதைவிட்டு மறைத்துக்கொள்ளே (உஎ)

அரைத்துமேபுடம்போட எல்லாஞ்சுன்னம் அறிவுகெட்டவாதிகளே யென்ன சொல்வேன், முறைத்துமேதிரிந்தாலோஎன்னலாபம் முக்கியமாய்ச்சவுக்காரம் வைத்துக்கொள்ளு, சிரித்துமேசொல்லாதே யொருவரோடேசொன்னுக்காற்பலனில்லைவாதமார்க்கம், தரை

த்துமேசவுக்காரச் சுன்னம் வைத்துத் தரிப்பாகச் சர க்குகளை நீற்றிக்கொள்ளே. (உஅ)

கொள்ளவேசரக்கெல்லாஞ் சொன்னபடி கேட் கும் கொடுமையாய்ச் சொல்லாதே கட்டைப்பாரு, வி ள்ளாதே யொருவருக்குஞ் சொல்லிடாதே விருப்ப மாய் வழலையென்ற கல்லைப்பாரு, உள்ளபடியெல்லா மே சித்தியாகும் உறுதிமெத்த வயித்திபத்தை முன் னேபாரு, தள்ளமாய்ப்பாகமாய்ச் செய்துகொள்ளுச கலசித்துமாடலாம் தாக்கிடாயே. (உகூ)

சவுக்காரம்.

தாக்கிடவே சிவன்வைத்த சவுக்காரந்தான் தாட் டிகமாய்ச்சொல்லிவிட்டா ரன்பாய்த்தானும், வாக்கிட வேசவுக்காரம் சொன்னேன் பாரு வகையாகவதற்கிது தான் சுருக்குமாகும், நோக்கிடவேபூநீறு பதக்குவாரி நுணுக்கமாய்ப்பாண்டத்தி விட்டுக்கொண்டு, பாக்கிட வேகற்சுன்னம் படியுநாலு பதிவானபாணியது படியீ ரெட்டே. (௩0)

எட்டுமேயூற்றியே கரைத்துக்கொண்டு இதமாக மூன்றுநாளானபின்பு, வட்டுமே தெளிவிறுத்துப் பீங் கானிட்டு வடிவானஉமிநெருப்பில்சுவறக்காய்ச்சி, நட்டு மேகுழம்பான பதமும்பார்த்து நலமாகவெடுத்துமே யப்பால்வைத்து, விட்டுமேசீனமது பலமும்சேரு விரு ப்பமாய்க்கரியில்வைத்து பொரித்துப்போடே. (௩க)

சீனச் சுன்னம்.

போடவேநீர்போக வெள்ளையாகப் பொரித்துமே கல்வத்தி லிட்டுக்கொள்ளு, ஆடவே சவுக்காரக் குழ ம்பைவிட்டு அதட்டியரைவில்லைசெய்து ரவியில்வைத்

து, காடவேபெரியபுடம் போட்டெடுக்கக் கடுங்காரஞ் சீனமது சுன்னமாகும், நாடவே பின்பொருக்கால் கல் வத்திட்டு நலமாகவரைத்தபின்னர் காயப்போடே. ()

போடவேகற்சுன்னம் நடுவேவைத்துப் பொறுக்க விப்படியைந்து திறந்தான்போடு, ஓடவேயைந்துதிறம் போட்டெடுத்து ஊட்டுமே வீரமது நாலத்தொன்று, நாடவேசவுக்காரக் குழம்பைவிட்டு நாடியேயரைத்த ரைத்துக் குக்குடத்திற், போடவேசீனமது சுன்னமா கும் புதுமையாங்கவர்களு போக்குத்தானே. (௩௩)

போக்கானதாளகத்தைப் பலமும்வாங்கிப்போக் கோடே கற்சுன்னம் படியும்போட்டு, வாக்கானபாணி யது படியும்விட்டு வகையானதாளகமு மதிலேபோட் டு, தாக்கானவடுப்பதனி லேற்றிக் கொண்டு தடையற வே கமலம்போ லெரியவிட்டு, பாக்கான தலம்பியெடு தாரந்தானும் பதியான வெண்ணெய் கக்கிச் சுத்தி யாமே. (௩௪)

சுத்தியாந் தாளகத்தை யெடுத்துக்கொண்டு சுய மானசீனத்தின் சுன்னம்நேரே, பத்தியாய்ச்சவுக்காரக் குழம்பினாலே பதிவாகவரைத்துமே தாரமேலே, முத் தியாம்தடவிபே கணக்காகத்தான் முடிவாகரவியிலிட் டுதினந்தானேமூ, சத்தியாய்ச்சுண்ணம்பாற் க்வசம்செ ய்து சரியானகுக்குடத்திற் சுன்னமாமே. (௩௫)

சுன்னமாம்தாளகத்தி னீறெடுத்துச் சுகமாகவீர த்தைதயிடையேசேர்த்து, நன்மையாய்ச்சவுக்காரக் கு ழம்பினாலே நாடியரைமஞ்சளா முருட்டிக் கொண்டு. பின்னமில்லைக் காயவைத்து வைத்துக்கொண்டு பிரட் டியேயதின்பேரில் சீனச்சுன்னம், கன்னலாய்க்கட்டி

யைவைத்துத்தானுங் கவுதாரிப்புடம்போட்டேயெடு த்துக்கொள்ளே. (௩௬)

எடுத்துமே செம்புநா ஞென்றுருக்கி யிதமாக ஒ ன்றுகொடு தங்கமாக, அடுத்துமே தங்கமது ஆணியி ல்லே அரிதாரமாத்துத்தா னதிகவேதை, நடுத்துமே வெள்ளிக்கு இடையேசேர்க்க நலமான மாத்தெட்டுக் காணுங்காணும், படுத்துவிவ்வேதைபத்திப் பாருபா ரு பதிவானபாகத்தை யறிந்துபாரே. (௩௭)

பதிந்துபார்கற்சுன்னம் பூனீராலே பதிவான எல் லாமு நீற்றுப்போகும், அறிந்துபார் தாய்தகப்ப னி ரண்டினுலே அளவற்ற பிள்ளைகள்தான் ரொம்பவுண் டு, கதிந்துபார் சவுக்காரம் வைத்துக்கொண்டால் கன மான திறவுகோல் மெத்தவுண்டு, கதிர்ந்துபார் உவர் ப்பூவின் கதிரோகோடி கனிந்தாக்கால் சித்தியாங்கண க்குமாமே. (௩அ)

கணக்காகவழலையென்ற சுன்னத்தாலே கனமாக வேதையது ரொம்பவுண்டு, அணக்காகப்பூனீருல் கவ ரோகோடி யணைத்திடவே சகலமுந்தான் சுன்னமாகு ம், மணக்காகசுன்னத்தால் வேதைகோடி மதிப்பான ளங்குவகை கோடாகோடி, உணத்தாத தங்கத்தில் வேதைகோடி யுற்றுநின்றுபார்த்தவனே வாதியாமே.

வாதியாம் வழலையென்று மனதிலெண்ணி வகை யாகப்பிண்டத்தை யெடுத்துவந்து, சேதியாதரைத்து கோடி சுன்னஞ் செய்து சேர்த்துகார மில்லாமற்போ ன்தாலே, பாதிமதியணிந்தாரே பொயயென்பார்கள் பதிவானகருத்துரைத்து வாதில்மூடர், சோதியாத்தி றத்தாலேவழலைபொய்யாம் சூஸ்திரமாந் தீக்ஷைவிதி யைந்நூறுபாரே. (௪0)

பார்க்கவே சகலகருவெல்லாந் தோன்றும் பதிவானசவுக்காரச் சுன்னத்தாலே, ஏற்கவே சுன்னமென்றால் பொய்யோவல்ல இதமானசவுக்கார மாகுமட்டும், தாக்கவே யேழையைப்போ லிருந்து கொண்டு தடையற்றசவுக்காரச் சுண்ணம்பண்ணி, ஏற்கவேயெல்லாமும் நீற்றுக்கொள்ளு இருந்திடவே முத்தியா யிருந்துபாரே. (௪௧)

பூரச் சுண்ணம்.

பாருமேசீனத்தின் சுன்னம்ரெண்டு பதிவானபச்சைக் கற்பூரம் ரெண்டு, நேருமே யிவைரெண்டும் நேகரைத்து நிலையான சவுக்காரக் குழம்பினாலே, வாருமேவில்லைதட்டி ரவியிற்காய வளமான புடம்போடே பூரம்நீறும், காருமே பூரத்தின் சுன்னத்தாலே கருத்தானசகலமுந்தான் நீறுந்தானே. (௪௨)

நீறுமேதாளகத்தைச் சுத்திசெய்து நேராகப்பூரத்தைமேலே கட்டி, ஆருமே புடம்போட பூப்போல்நீறும் அடவானதாளகமும் சுண்ணமாச்சு, சேருமேவீரந்தா னாலத்தொன்று ஜெபமான சவுக்காரக் குழம்பினாலே, ஆறுமேயரைத்துமே நீலன்மேலே அதட்டியே தட்டிரவி காயவையே. (௪௩)

வைத்துமே குக்குடத்தில் துரிசுநீறும் வகையானதுரிசுநீர் நாலத்தொன்று, கைத்துமே சவுக்காரக் குழம்பினாலே கனமாகவரைத்துமேயமமேலே, வைத்துமேதட்டியே புடமும்போடவகையாகப்பூப்போல நீறும்பாரு, நீத்துமே யம்பரமுந் தங்கமாகும் நிலையானசவுககாரச் சுன்னத்தாலே. (௪௪)

ஆட்டான தாளகத்தின் சுன்னமொன்று அரைத்துமேவங்கத்தின் மேலேதானும், பூட்டாகப்பூட்டியே

காயவைத்துப் புகழாகமேல்நீறுகட்டிகாய,நாட்டாகப் பெரியபுடம்போட்டெடுக்க நலமானவங்கமது நீறுமாகும், காட்டாகக் கடுஞ்சுன்னம் வங்கச் சுன்னம் கவர் கோடிசொல்லுகிறேன் கண்டுபாரே. (சரு)

கண்டுபார் வங்கநீறு பலமெடுத்துக்கனிவானகிமிளையிலே யங்கியிட்டு, பண்டுபார்புடம்போட கிமிளை நீறும் பதிவானகிமிளையைத்தான் சவுக்காரநீரில், நண்டுபார் அரைத்துமே புடமும்போடு நலமாகச்சுன்னமது வாகுமட்டுந், துண்டுபார்கிமிளையது சுன்னமாச்சு துடியாகச்சாரமே லப்பிடாமே. (சசு)

அப்பியே புடம்போடச் சாரம்நீறும் அதன்பின்புசாரத்தைச்சவுக்காரநீரால், நம்பியே யரைத்துமே வில்லைதட்டி நயமாகஅடுப்படுக்க வைத்துக் கொள்ளு, கப்பியே புடம்போடக் கடுமையாகும் கனிவாகவெடுத்துமே சொல்லக்கேளு, தப்பிதமாய்ப் போகாமல் நாலத்தொன்று தனிவீரஞ்சேர்த்துமே சார்புகேளே. ( )

கேளுமே யிதைப்பரைத்து துரிசுமேலே கெடிபடவேபூசியதைப் புடத்தைப்போடு, ஆகுமேதுரிசியது சுன்னமாகும் அதன்பின்னர் செய்கின்ற வரிசைகேளே, தாளுமே துரிசிநீறு நாலத்தொன்று தளராமல் வீரமது சேர்த்தேயாட்டி, காணுமே யேமமென்றதகட்டிற் பூசிக் கனபுடத்தில்தங்கநீறு யிருக்கும்பாரே. (சஅ)

இருக்குமே யேமந்தான் நல்லவித்தை யிதமான உப்புக்குங் காவிக்காகும், நறுக்குமே ரசவாதம் சித்தியாகும் நல்லோர்க்கேயெப்போதுந் தப்பாதப்பா, பருக்குமேபந்தமது விட்டுப்போகும், பதமான ஞானமில்லை பரிசுமில்லை, வர்க்குமே மனந்தானும் நிலைக்கமாட்டார் வந்தவித்தையாவதென்ன கூறிற்றுனே. (சகூ)

சூதென்றுற்சொல்லுகிறேன் கேளுகேளு சூதாக ஒருசரக்கை யொன்றிற்சேர்க்க, நீதியாய்ப்பொன்னாச் சுசேராவிட்டால் நிர்ணயமாயொன்றுமில்லை நினைவாய்ப்பாரு, ஆதிபாய்நாமந்தா னாணும்பெண்ணும் அன்பாகச்சேர்ந்துதா னிருந்ததாலே, பேதியாய்மனிதர்தா முற்பத்தியானார், பிரட்டாகச்சொன்னாக்கா லிசைவாகாதே. (௫௰)

இசைவாகக்கற்சுண்ணம் முன்னேசெய்த விதமான பூநீரில் எடையேசேரு, தசையாகப்பாணிவிட்டுக் கலக்கிக்கொண்டு தாக்கியேதெளிவிறுத்துச் சரக்கில்விட்டு, விசையாகஅரைத்திடவே சுண்ணமாகும் விதவானசீனத்தைச் சுண்ணஞ்செய்து, இசையாகப் பச்சைக்கற்பூரஞ்சேர்த்து இன்பமாய்ப்போட்டிடவே சுண்ணமாமே. (௫௧)

சுண்ணமாந்தாளகத்தின்மேலேகட்டிச் சுயமாகப் புடம்போடக் காரம்நீறும், அன்னமாந்தாரத்தால்வங்கம்நீறும் அடைவானவங்கத்தால் நிமிளைசாகும், பின்னுமாம்நிமிளையினால் சாரம்நீறும் பேர்பெரியசாரத்தால் துரிசுநீறும், கன்னமாம்துரிசியினால் சூதஞ்சாகும் கருத்துவைத்தாலெல்லாமே நீறிப்போமே (௫௨)

நீறினால்பலனுண்டு வாதமுண்டு நீறாட்டாலொன்றுமில்லை நில்லாதப்பா, ஆறினாம்பாகம்நிற்கும் வாதமாகும் அவசரத்தினின்றாலோ வொன்றுமில்லை, காறினாற்றுரிசதுதா னீறிப்போனால் கலக்கமற்றரசவாதம் கைக்குள்ளாச்சே, போரினாற் சண்டையிட்டால் வருமோவாதம் போக்கோடேநில்லத்துமே பார்த்திடாயே.

பார்த்திடவேபலனுதும் வாதமாகும் பாகத்தை விட்டாக்கா லெல்லாம்போச்சு, சேர்த்திடவேசுக்கானைப் பூனீறோடே சுயமானகுருவாகும் வழலையாகும். கார்த்திட்டாற்சவுக்கார குருவைச்சொல்வார் காணுட்டால்சொல்லார்கள் காடென்பார்கள், நேர்த்திபாஞ்சவுக்சாரம் வைத்தால்வாதம் நிலைக்குமேவாதந்தான் நிலைக்கும்பாரே. (ருச)

நிலைக்குமேபாந்தமண்ணும் தண்ணீரென்ற நிலையானபோது கல்லுப்புச்சுண்ணம், வலைக்குமேபூநீறும் இரண்டும்சேர்ந்தால் வளமானவழலையென்றேபேருமாகும், கலைக்குமேயிவ்விரண்டும் சேராவிட்டால் கனிவாகவொன்றுமில்லை யெல்லாம்பொய்யாம், அலைக்குமேதிரியாமல் வழலைபாரு ஆதியாமுவர்மண்ணி னடியைப்பாரே. (ருரு)

அடியென்றும் முடியென்றும் கல்லுப்புச்சுண்ணம் அடியானபூனீறை ரெண்டுமாக, பிடியென்று சொல்லாது தலைதெறித்துப் போகுமேபேசாதே பூமிநாதம், குடியென்றும்சத்தியென்றும் நாதமாகும் குடிகெடுத்தவாதிகளே கொள்ளைகொள்ளை, துடியாகவழலையுப்பு முன்னேபார்த்தால் துப்புறவாய்வாதம்வந்து நிலைக்குந்தானே. (ருசா)

வழலை வேறு.

நிலைக்குமேயின்னமொரு வழலைசொல்வேன் நேராகஈஸ்வரிதான் நந்திக்குச்சொன்னாள், மலைக்குஞ்சவுக்காரச் சுண்ணஞ்சொல்வேன் மதியானகருவிதுதான் லதுவுமாகும், வலைக்குமேபூநீறு படியும்நாலு வகையாகக்கற்சுண்ணம் படியுமொன்று, கலைக்குமே

தண்ணீரும் படியுநாலு கனிவாகக்கலக்கியே திரி நாள்வையே. (ருள)

வைத்துமேதெளிவிறுத்துப் பீங்கானிட்டு வகை யாகவுமிநெருப்பிற் குழம்பாக்காய்ச்சி, நைத்துமே குருவாக வைத்துக்கொண்டு நலமாகச்சொல்லுகின்ற மார்க்கங்கேளு, பைத்துமேதாளகமும் பலமுமொன் று பதிவாகச்சுண்ணம்பு நீரிற்போட்டு, கைத்துமே கொதியிட்டே யெடுத்துப்பாரு கனியவேயெண்ணெ யகக்கிச் சுத்தியாமே. (ருஅ)

சுத்திபாந்தாளகத்தை யெடுத்துக்கொண்டு சுரு க்காக அப்பிரேகம் பலமும்நாலு, முத்தியாய்வீரமது பலமுமொன்று முனிவாகக்கல்வத்திற் போட்டுப்பின் பு, நத்தியாய்த்தண்ணீரை விட்டேயாட்ட நலமாகவெ ண்ணெயாம் நாட்டக்கேளு, புத்தியாந்தாளகத்தின் மேலேபூசிப் புதுமையாய்ரவிதனிலே காயப்போடே.

போட்டுமேபுடமைந்து எருமுறித்துப் போக் கோடேயதின்மேலே சுன்னம்வைத்து,ஆட்டுமேயதின் பேரி லுண்டைவைத்தே யடைவாக அதின்போரில் சு ன்னமிட்டு, காட்டுமேயதின்பேரில் எருமுறித்துக் க னமாகப்போட்டுமே தீயைப்போடு, வாட்டுமெள்ள எ டுத்துப்பார் தாரமெல்லாம் வளமாகச்செந்தூரமாகும் பாரே. (சுய)

செந்தூரந்தனையெடுத்துக் கல்வத்திட்டுச் சிவப் பாகச்சவுக்காரக் குழம்பினலே,யிருசாமமதையரைத் து வில்லைசெய்து இணக்கமாய்க்கட்டியே மேலேகே ளு, நந்தூரம் அப்பிரேகம் மேலேகட்டி நலமாகமுன் போல புடத்தைப்போடச், செந்தூரமாகவேசுன்னமா கும் சிறப்பானசுன்னத்தின் மகிமைகேளே. (சுக)

மகிமையென்னசொல்லுகிறேன் வங்கத்தின் மேல் வளமாகக்கட்டியே போடச்சுன்னம், தகைமையாந்துருசின்மே லங்கிபூட்டிச் சாதகமாய்ப்புடம்போடச் சுன்னமாகும், மகிமையாம்சூதத்தைக் கட்டிக்கொண்டு மாற்றுள்ள தங்கமெடை நாகஞ்சேர்த்து, வகையாகக்கட்டினதோர் ரசமும்சேரு வாகானகளங்காகும் மார்க்கங்கேளே. (சுஉ)

மார்க்கமாய்ரவிநூற்றுக் கொன்றுருக்கி மயமாகக்கொடுத்திடவே தங்கமாகும், ஏற்குமேவிற்றுமே செலவுசெய்தே யின்பமாய்ரணகணங்கள் பார்த்துத் தேறும், ஆர்க்கவேசெந்தூரஞ் செய்துதின்ன அடவாணகாயசித்தி யாகும்பாரு, ஏற்கவேவெகுகோடி காலம்வாழ்வீர் ஏழைமதிபோகாம லிருந்துபாரே. (சுஙு)

## தாம்பிர வங்கம்.

இருந்திடவேநவச்சாரம் பலமுமொன்று இதமாகச்சவுக்காரக் குழம்பையூற்றி, அருந்திடவேயதையரைக்க ஜலமுமாகும் ஆகவேநெடியேற மாட்டிக்கொண்டு, வருந்திடவேவீரமது காலுங்கூட்ட வகையாகரத்தம்போல் நீராய்நிற்கும், பருந்திடவே நீரிதனி லூற்றிக்கொண்டு பக்குவமாய் அயக்கறண்டி தன்னிலூற்றே. (சுச)

ஊற்றியேகந்தகத்தைப் பொடியாய்ச்செய்தே யுற்றுமேசவுக்காரந் தெளிந்தநீரில், பார்த்துமேபோட்டுநீ கொதியிட்டாக்கால் பதிவாகமெழுகாகு மெடுத்துக்கொண்டு, நாற்றிசையும் மெய்க்கவே செம்புதன்னை நலமாகப்பலமொன்று நிறுத்துப்பின்பு, வாழ்த்தியே குகையிலிட்டே யுருகும்போது வகையானமெழுகதைத்தா னெடையேதாக்கே. (சுரு)

தாக்கிடவேசெம்புகா ணியமாகுந் தடையறவே நொறுங்குமது கல்வத்திட்டு, பார்த்திடவேவீரத்தை யெடையேசேர்த்துப் பச்சைத்தண்ணீர் விட்டதனைய ரைநேராகக், கோரிடவேமஞ்சள்போ லாகும்பாரும் குணங்கெட்ட வாதிகளை காயவைத்து, நாத்திடவே கடைநீரு விஷ்ணுமுட்டி நலமாகவில்லைதட்டிக் காயப் போடே. (௬௬)

போட்டுமே அயப்பொடியும் பலமுமொன்று பொருந்தவேசூதமரைப் பலமும்போட்டு, காட்டுமே பாணியா லரைத்துவில்லை காரியமாய்த்தட்டியே காய வைக்க, நாட்டுமேபூத்துமது நிற்கும்பாரு நலமான பூவதனைப் புகைநீராலே, நாட்டுமேகல்வத்திலரைத்து ப்பின்பு தடையறவேமுன்வில்லை கவசம்கட்டீடே. (௬௭)

கட்டியேவில்லைபினைடையேகட்டிக் காஷ்டமாய் நூறெருவில்புடத்தைப்போடு, கெட்டியேயெடுத்துப் பார் செம்பாய்நிற்கும் திறமானசெம்பதனை மதிப்பிற் றுக்கு, மூட்டியேயெட்டிரண்டு சேர்த்தேயூக முடிவா னமாற்றேழு காணுங்காணும், நாட்டியேபுடமிரங்கித் தங்கமாகும் திடியானவிருதமிது நேமமாமே. (௬௮

ஆமேதானிச்செம்பையெடுத்துக்கொண்டு அட வானஜீவனத்தைப் பண்ணித்தேறு, நாமேதான்சொல் லிவிட்டோம் வழியாய்த்தானும் நலமானபாகமிது நாடிப்பாரு, பூமேலேயிருப்பதற்கே யிந்தச்செம்பு போக்கோடேபார்த்தாக்கால் எல்லாமாகும், பூவின் மேலிருக்கவென்றால் செம்பைப்பாரு போக்கோடே கலசித்தி யாடலாமே.

## வெள்ளி முறை.

ஆடலாம்வெள்ளிமுறை யொன்றுகேளு அடை வானசவுக்காரக் குழம்புதன்னை, வாங்கமேபீங்கானில்

விட்டுக்கேளு வலுப்பமாய்ப்பாஷாணம் பலமுமொ
ன்று, நாடவேபொடித்துமே பீங்கானிட்டு நலமாகவு
மெருப்பிற்காயவைத்து, மூடவேகல்வத்திலரைத்து
மைபோல் முறையாகவைத்துருட்டிக் காயவையே ()

வைத்துமேகற்சுண்ணம் படியுமெட்டு வகையா
ன சட்டிதனிற்பாதியிட்டு, உய்த்துமேயுரைத்ததனில்லை
நடுவில்வைத்துவுண்மையாய்க்கற்சுண்ணம்மேலேமூடி.
நைத்துமேஅமுக்கியந்தச் சட்டிமூடி நலமான அடுப்
புதனில் எரியிட்டாக்கால், பைத்துமேயுருகியது வட்
டாய்கிற்கும் பதிவாகவெடுத்துமே பாகங்கேளே.

பாகமென்னசொல்லுகிறேன் பாஷாணத்தைப்ப
திவாக வெள்ளியந் தன்னிற்றூக்கு, ஆகமாயுடைந்தும
து தூளாய்ப்போகுமப்பாலேவெள்ளிதன்னிலெடை
யேதாக்கு, யோகமற்றேயுடையுமது கல்வத்திட்டு ஒக்
கவேயிந்தவெடை பாஷாணஞ்சேர்த்து, ஆகவேசவுக்
காரக் குழம்பாலாட்டி அடைவாகப்புடம்போட்டுமெ
டுத்துக்கொள்ளே.

எடுத்துமேயிந்தவெடைச் சூதஞ்சேர்த்தே யித
மானசவுக்காரக் குழம்பைவிட்டு, நட்த்தியேவில்லைத
ட்டிக் காயவைத்து நலமாகவப்பிரேகம் கவசங்கட்டி,
எடுத்துமேகுக்குடத்திற் போட்டுத்தானுமிதமாக எ
டுத்துப்பார் சுண்ணமாகும், படுத்துமேவெள்ளியம்
நாறுருக்கிப் பதிவாகவென்றிடவே வெள்ளியாமே.

ஆமேதானிந்தவெள்ளி சரிகைபோல அண்ட[illegible]
கத்தானிருக்கும் வங்கந்தன்னை, காமேதான்கொடுத்
தாத ஓடாதப்பா கனமானபாஷாணச் சுண்ணமார்க்க
ம், ஆமேதான்செம்புதனிற் கொடுத்தாயானால் அன்
பானவெள்ளியது மார்க்கமாகும், தாமே தான்பாக

மாய்ச் செய்துகொள்ள தடையற்றஞானமெல்லாங் கி
ட்டுந்தானே. (எச)

கிட்டுமேவெள்ளிதா னெவ்வாறென்றால் கெடி
யானசவுக்காரக் குழம்பினாலே, முட்டியேவெள்ளைய
து பாஷாணத்தில் முறிவானசுண்ணம்பு நீரினாலே,
தட்டியேவெள்ளிய முடைந்ததாலே தடியானவெள்
ளியது சேர்ந்துதானே, கட்டியாமிதனாலே ரசமுஞ்
சேர்ந்து கனிவான வெள்ளிபது மானவாறே (எரு)

வாறேதோவென்றக்கால் சொல்லக்கேளு வகை
யானவாதிக்குப் புத்திவேண்டும், காரேதுகைபாக வ
ரிசைவேண்டுங் கனமானசவுக்காரங் காணவேண்டும்,
பாரேதுசரக்கெல்லாம் சொன்னபடிகட்டும் பதமாகு
ம்வாதந்தா னிந்தவித்தை, தாரேதுபாகத்தை கிட்டு
வந்தால் தப்பாமற்பொய்யாகும் சார்புதானே. (எசு)

சார்பானசவுக்காரக் குழம்பினாலே சகலசித்தி
யாடலாம் தாயோசொல்வாள். பாரானசுழிமுனையின
டிபாரு பரிவானஞானம்வரும் வாதத்தாலே சீரான
குபேரனைப்போல் வாழ்வுண்டாகும் சித்திமுத்தியாகு
மென்று நந்திசொல்லக், காலானவழியறியாதமூடர்
கனிவானவாதமில்லை கையிற்றானே. (எஎ)

இல்லையென்றுபோகாமல் வழலைபாரு இதமான
நற்குணத்திற் குணமும்பாரு, கொல்லையென்றுகுடி
கெடுக்க வேண்டாமப்பா குணமானசாஸ்திரத்தைப்
பார்த்துத்தேறு, வில்லையாய்மெதுவாகச் செய்துகொ
ள்ளு விருப்பமாய்வைத்துமே புடத்தைப்போடு, கொ
ல்லிமலையிலேயாதே வெள்ளிபாரு குணமாகும் நலமா
கும் கூடிவாழே, (எஅ)

கூடவேதன்வந்திரி சவுக்காரத்தைக் கூறினாரப்ப
டிநான் கண்டுசொல்ல, நீடவேயுலகத்தில் மறைப்பில்

லாமல் நேராகச்சொல்லுகிறே னென்றுகேளு, பாரி டவேசித்திரை வைகாசிக்குள்ளே பரிவாகப்பொங்கி யே யெழுந்துநிற்கும், ஆடவேமஞ்சளிட்டால் சிவந் துபோகும் ஆகையால்பூநீறின்மகிமைதானே. (எகூ)

வழலை வேறு.

தானென்றபூனீறு பதக்குவாரித் தப்பாமற்கற்சுண் ணம்படியுநாலு, கோனுமென்ற தண்ணீரும்படியுநாலு கொள்கையாயிதைவிட்டுக் கலக்கிப்போடு, வானென் றமூன்றுநாள் வைத்துமூடி வரிசையாய்நாலாம்நாள் தெளிவைவாங்கி, கானென்றிறுத்துமே பீங்கானிட்டு க் கனிவாகப் பொங்காமற் காய்ச்சிடாயே. (அ0)

காய்ச்சியேகுழம்பான பதத்திற்றனும் கனிவாக ச்சொல்லுகிறே னாற்றுக்கேளு, பாச்சியேவெடியுப்பு பலமோபத்து பதிவானசீனமது பலமும்பத்து, நாச் சியேபழச்சாறு விட்டேயாட்டி நலமானவில்லைதட்டி ப் புதுச்சட்டியிட்டு, தோக்கியேகடுமையா யெரியிட் டாக்காற் றடையறவேபூப்போலச் சுண்ணமாமே. ()

சுன்னத்தைக்கலுவத்தி விட்டுக்கேளுதுடியானச வுக்காரக் குழம்பினலே, பின்னுமதை அரைத்து எ ரி யிட்டுவாங்கு பிரியமாய்க்கலுவத்தி விட்டுக்கேளு, நன்னயமாயரைத்துமே சட்டியிட்டு நலமாகவிப்படி யே யைந்துதிறமெரித்து, கன்னற்போல் வெந்துதா ன் சுன்னமாகும் காரியமாம்வெடியுப்புச் சுண்ணமாச் சே. (அஉ)

ஆச்சுதேவெடியுப்புச் சுன்னந்தன்னை அரன் ம றைத்தார்சித்த நமேமறைத்துச்சொன்னார், காச்சுமே தீக்ஷிதிதிறந்து சொன்னேன் கனமான ஆட்டெல் லாம் வெடியுப்பாட்டு, தாச்சுதேயிச்சுன்னம் போலே சொல்லத் தடையறவேவாதமெல்லாஞ் சித்தியாகும்,

மூச்சுமேயடங்கினல் சடம்கில்லாது முனையானசுழி
முனைதான் வழியிற்சேரே. (அங)

வழிபோடேசென்றறிந்தால் வாதியாவான் வழி
தப்பிப்போனலோ மார்க்கம்பொய்யாம், சுழிபோடே
தம்வாசல்வழியைக்கண்டு சுகாதிதபூரணம்போற்சொ
க்கிப்பாரு, கழியோடேசுன்னத்திற்புகைநீர்விட்டுக் க
னிவாகவைத்திடவே தயிரதாகும், தழியோடேதயிர்
தனிலே தாரிசைத்தோய்த்து தப்பாமல்ரவிதனிலே
காயப்போடே. (அச)

காய்ந்தபின்சுக்கான்போற் கட்டிப்போகும் க
ணக்காகவெடுத்துமே யப்பால்வைத்து, ஓய்ந்தபின்
னொருபலந்தான் வெள்ளியம்போட்டு உற்பனமாமுரு
கையிலே சொல்லக்கேளு, ஆய்ந்தபின்பு வெடியுப்புச்
சுன்னம்போட்டு அடவாகக்கரண்டியினல் தேய்த்துப்
போடு, காய்ந்தபின்புகடுஞ்சுன்னம் வங்கச்சுன்னம்
நலமாகக்கலுவத்தி விட்டுக்கொள்ளே. (அரு)

இட்டுமேசவுக்காரக் குழம்புதன்னை யிதமாகவி
ட்டரைத்துப் புடத்தைப்போடு, நட்டுமேகடுஞ்சுன்
னம் வங்கச்சுன்னம் நலமாகவெடுத்துமே வீரம்போ
ட்டு, பட்டுமேசவுக்காரக் குழம்பினலே பதிவாக அ
ரைத்துமே நீலன்மேலே, எட்டுமேயங்கியது குளிசங்
கட்டி யிதமாகக்குக்குடமாய்ப் போட்டுக்கொள்ளே.

போட்டுமேயெடுத்திடவே தாரிசுநீறும் பேரண்
டம்க்ஷணந்தனிலே நீறிப்போகும், காட்டுமேசரக்
கெல்லாம் சொன்னபடிகேட்கும் கடுங்காரந்தாரிசியி
ன வெல்லாமாகும், மூட்டுமேசகலத்துறை யிதுக்குள்
ளாகும் மூதண்டசூதத்தை மூட்டிக்கொள்ளும், நாட்
டுள்ளோர்காணர்கள் தாரிசு நீறு நானறிந்துவுலகத்தி
ல்நாட்டினேனே. (அஎ)

நாட்டினேன் முன்வைத்த துரிசுதன்னை நலமாக
விராகனெனடை தூக்கிக்கொண்டு, காட்டுமேவிராலியிலே
க்குள்ளேயிட்டுக் கனிவாகவமிழ்த்திவைக்க ஜலமதா
கும், தேட்டையாஜலமிறத்துக் கரண்டியூத்ததிறமா
கசூதத்தை யதிலேயிட்டு, பாட்டுமெநாதிபிடவே க
ட்டிப்போகும் பரிவாகமத்தங்காய் தனிலேவையே.()

வைத்துமேபுடம்போட்டே யெடுத்துப்பாரு வ
கையாகதந்தமபோல மணியுமாகும் சேர்த்துமேசூத
மணி கண்டபோதே சிறப்பாகச்சகலபல னுடனேயாகு
ம், நாத்துமேநாதாக்கள் மறைத்துப்போட நலமானச
வுக்கார வழலேதன்னை, சீர்த்துமேதீக்ஷைவிதி திறந்
துசொன்னேன் சிறப்பாகச்சூதமென்ற மணியைத்தா
னே. (அக)

மணியானசூதம்தின் றுருகும்போது மாட்டுமே
யொன்றுக்குநாலுதங்கம், கனிவாகத்தங்கமெடை நா
கம்போடு கனிவானநாகத்தைக் கட்டிக்கேளு, துடி
யானவெடியுப்பு ஜயநீர்தன்னில் துப்புறவாயுருக்கியே
சாய்த்துப்போடு, கனியானநாகமது மணியுமாகுங்
காட்டிடவேதங்கத்திற் சமனுப்ச்சேரே. (கூ)

சேர்த்துமேயுருக்கிடவே களங்குமாகும்ஜெபமா
னகளங்கத்தைச் செம்புநூறில், ஆர்த்துமேகொடுத்தி
டவே திசைமாறுதும் அடைவானகளங்கத்தைச் செந்
தூரஞ்செய்ய, பார்த்துமேகலுவத்தி லிட்டுக்கேளு
பதிவாகவுடைத்துவைத்து யுரைநீராலே, நார்த்துமே
யரைத்துமெடைமேருதன்னில் நலமாகவடைத்துமே
சொல்லக்கேளே. (சுக)

கேளுமேசட்டியிலே மணல்தானிட்டுக் கிருபை
யாயதன்பேரில் மேருவைத்து, நாளுமேயழுத்தளவும
ணலையிட்டு நலமாகத்தீயெரிக்கச்சொல்லக்கேளு, வா

ளுமேகமலமுதல் காடாக்கினிதானும் வகையாகப்பனி ரெண்டு ஜாமம்போடு, ஏளுமேபாறவிட்டு மெடுத்துப் பாரு இதமானசெந்தூர மானவாறே. (கூஉ)

வாருங்காண்செந்தூரம் முருக்கம்பூப்போல் வகையாகநவலோகந் தன்னிலோட்டங், காருகேள்திசைமாற்று மாகும்பாரு கணக்காகமண்டலந்தான்தேனிலுண்ண. தாறுகேள்நோமெல்லாந் தவிடுபொடியாகும் தாட்டிகமாய்நோய்மூன்றுஞ் சிதறிப்போகும், பாறுகேள்காயசித்தி யுடனேயாகும் பத்தியாயுலகத்திற் பதிவாய்கில்லே. (கூ௩)

கில்லென்றுசவுக்காரச் சுண்ணம்வைத்து கிலேபான துரிசிநீர் தன்னேநீற்று, கல்லென்றுசூதமதைக்கட்டிக்கொண்டு கணக்காகவெடியுப்புச் சுண்ணம்வைத்து. தில்லைநாட்டரசரைப்போ லிருந்துவாழ்வீர் ஜெகமெல்லாம்ஞானங்கள் மிகவுமாகும், கல்லேயென்றுபாகமாய்ச்செய்துகொள்ளக் கருத்தானரசவாத மாகும் பாரே. (கூச)

வாதமாம்வெடியுப்புச் சுண்ணத்தாலே வகையாகவுற்றுமே பார்த்தபேர்க்கு, நாதமாம்பூநீற்றை விட்டாயானல் நலமானபலனில்லை நாடிப்பாரு, காதமாமிவைரெண்டால் வாதமாச்சு கலனென்றுவிட்டாக்கால் எல்லாம்போச்சு, நீதமாய்த்துரிசதனை நீற்றுவிட்டால் நிலைக்காதுவாதம்முதல் நீற்றலாச்சே. (கூரு)

ஆச்சென்றுநினைக்காதே சவுக்காரத்தை யாண்மையாய்நீற்றியே வேதைபாரு, மூச்சென்றவாதமெல்லாம் கைக்குள்ளாகும் முடியுமட்டும்வாதமெல்லாஞ் சோதித்தேறு, பாச்சென்றுநில்லாதே பலனேயில்லை பண்பாகமார்க்கத்தைப் பணிந்துபார்க்க, காச்சென்றவுலகத்தில் ஞானமாகும் கைகண்டபொருளிதுதான் வாதமாமே. (கூசு)

வாதந்தான்செய்யும்வகை யருமையல்ல வாய்திறந்துபேசாமல் வழலைபாரு, நீதந்தான்தவறினால் பலிக்காதப்பா நெறியையுற்றுப்பெருமையாய்ப் பண்ணிக்கொள்ளு, வேதத்திலுற்றபடி சொல்லிவிட்டேன் வேதாந்தம்சித்தாந்தம் இரண்டுமொன்று, நீதமாய்ச்செய்தாக்கால் பலனுமாகும் நீகழ்காலமெல்லாந்தானிருப்பதாமே. (கஎ)

இருக்கவேசவுக்கார வழலைதன்னை யிதமாகச்செய்திடவே முத்திசித்தி, மருக்கவேவழலைதன்னை மறந்தாலே மலைப்பானசரக்கெல்லா மோடிப்போகும், முருக்கம்பூப்போலவே சிவப்புமேற்று முக்கியமாய்ச்சாயந்தான் மிகவேயேறும், அருக்கன்போல்சிந்தூரம் செய்துபாரு ஆதிபரவழலையென்றஆதிதானே. ()

ஆதியாம்வழலைதன்னை முன்னேசெய்து அடவானதுரிசியது பின்னேசெய்து, போதியாரசங்கட்டவாதமாகும் பிரபலமாய்வாதமெல்லா மெளிதிலாகும், நீதியாய்ப்பார்க்கிலிது வுயர்ந்தவித்தை நிச்சயமாமார்க்கமாய்ச்செய்துகொள்ளு, கோர்நிேயயணுவணுவாய்ச் சோதித்தேறு குணமாகவாதமெல்லாம் குறுக்குமாமே. (கக)

குருக்காகதன்வந்தரி சவுக்காரத்தைக் கூறினரெல்லோர்க்கும் தெரியத்தானும், முருக்காகசவுக்காரங் கண்டபேர்கள் முனிவாகச்சொன்னாக்கால் ரவிகோடிநரகம், வருத்தமாய்வெகுபாடு பட்டுத்தேறி வகையானசவுக்காரங் கண்டுதேறி, உருத்தாகவழலையென்ற ஆட்டுத்தானே உத்தமனார்யூகிமுனி நூறுந்தானே. (௧00)

யூகிமுனிவர் அருளிச்செய்த

சுருக்கம் நூறு.

முற்றிற்று.

கடவுள் துணை.

## நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்.

அகாரமும் உகாரஞ்சேர்ந்தால் ஆனந்தமாகுமாப்போல், மகாரத்தில் சோதிபாதம் மன்னியே தருவதென்று, நகாரத்திலுதித்தசித்தன் நாடிறையருளினாலே, வகாரத்திலெவர்க்குஞ்சொன்ன வழிதனையறிந்தீரே. (௧)

ஆறிவினால்வெள்ளையான ஆயிழைபூநீறென்று, பிரிவிலாக்கம்பியுப்பு பேசாமலிடைதானென்று, முறியாமல்ரெண்டுமொன்றாய் மூட்டியேசாமமாட்டி, உரியோடும்வெண்ணெய்போல உருக்கினால் வட்டாய்ப்போமே. (௨)

வட்டைநீகல்வத்தாட்டி வழியாகக்குழிக்குள்ளே வை, சட்டமாய்க்குழியைமூடிச் சமாதியிற்சலந்தெளிக்க, எட்டுநாள்பொறுத்துமெள்ள எடுத்திடுசிவந்தநீரை, கட்டமேதீரவென்று கருதியேதீபமீயே. (௩)

கருதியதீப தூபம் காட்டிடுதேவர்க்கப்பா, சுருதியேசொன்னதிந்த, துரிதமாய்ப்புட்டிக்கிட்டு, அரிதான தொழிலுக்கெல்லாம் அமர்ந்திடவார்த்தரைத்து, வெரிதானாவியிற்போட பிரண்டுதான்சுண்ணமாச்சே. (௪)

ஆமெனவஸ்துநாலும் அடைவுடன்தனிச்சரக்குந், தாமெனத்தொந்தித்திந்தத் தப்பிநீர்நிறையவிட்டு, ஓமென்றாவியிற்போட உலர்ந்திடஎட்டுக்குள்ளே, சாமெனும்முன்னோரெல்லாம் தாக்கினாற்சாகும்பாரே ()

சாகுமேயிந்தநீரால் சதாசிவன்பாதத்தாணை, ஆகுமேசுண்ணமெல்லாம் அடவுடன் புடமுந்தீர்ந்தால், வேகுமேநவலோகங்கள் வெறிகொண்ட ஆத்தாள் நீரில், போகுமேஅண்டாண்டம் புந்தியாலுதித்துக்காணே. (சு)

காணென்றமூடருக்குக் கபடத்தைநீக்கவேண்டி, ஆணென்றபிள்ளைகட்கு அதிசயஞ்சொல்லக்கேளீர் தாணுவாம் வீரங்காலும் தனிச்சீனங் காலுங்கூட்டி பேணுவாம்ரசகர்ப்பூரம் பின்னுங்கால்கம்பியுப்பே. ()

கம்பியோடிவைநாலுக்கும் கனம்பெறநாற்காலொன்று, வெம்பியவுப்புச்சுண்ணம் விபரமாயுறுதிகண்டாய், தம்பியாயிடையொன்றப்பாதாக்கிடநெகிழ்ந்துவில்லை, நம்பியேரவியிற்போடநலம்பெறக்காய்ந்துபோமே. (அ)

காய்ந்தபின்புடத்திலப்பா கண்டந்தநீரெடுத்து, ஆய்ந்திடவந்திடைக்கி அந்தமாம்ரசத்தைச்சேர்த்து, மாய்ந்திடஅரைத்துமூன்று நாள்தனில் அரைத்துவாங்கில், மாய்ந்திடவெய்யிற்கண்டால் மடிந்துபோம் அறுநீர்போக்கே. (கூ)

அறுநீரேகுருவதாகும் அந்தந்தத்துறைகட்கெல்லாம், பிரிந்திடாதிந்தவேதை பேச்சில்லைசொல்லப்போகா, உரிந்துபோம்கட்டைதள்ளி உயர்ந்திடசோதிகாணும், சரிசரியென்றுசொல்ல சராபுமேவணங்குவானே. (கo)

வணங்குவானின்னமொன்று வகையினைசொல்லக்கேளு, பிணங்காமல்ரசிதநாகம் பேணியேமுன்போற்

சேர்த்து, இணங்காதகல்வத்திட்டு எடுத்திடு மூன்று நாளில், குணங்காணும்ரவியிற்போட்டால் கும்பிட்டு நீரில்போமே. (கக)

போகுமேநவலோகத்தில் புனிதமாய் வேதைகாணும், ஆகுமேயினங்கள்கண்டு அறிந்திடுவேதைபாரு, சாகுமேதிராவகத்தாற் சண்டாளவூறல்போகும் வேகுமேலடுப்பில்லையா வினோதமுமெத்தக்காணே. ()

மெத்தவேரசிதவங்கம் விளங்கிடுசொர்ணமுண்டு, சித்தமாய்முன்போல்செய்யத் திட்டமாய்ச்சொல்லிவிட்டேன், கத்தனைக்கண்டுகொண்டு கள்ளருக்குரைசெய்யாதே, புத்தியிலடக்கம்வைத்துப் புனிதனையிருக்கலாமே. (கங)

இருக்கவேதங்கமொன்று இதமானகட்டுவங்கம், உருக்கலாம்சரியாய்ச்சேர்த்து ஒவ்வியேகளங்கமாகும், பெருக்கலாம்ரசமுமென்று பேசாமல்சேர்த்தரைத்து, செருக்கலாம்களஞ்சிவீதஞ் சேர்ந்திடுசாரகாரம். (கச)

காரமும்முன்போல்வீதம் கண்டுதான் சேர்த்துமாட்டு, ஆரமும்வேண்டுமோசொல் அந்தநீர் தன்னைக்கண்டால், ஓரமாய்ச்சொன்னதல்ல உற்றுநீபார்த்துக்கொள்ளு, வாரமுமூன்றுநாளில் மாண்டிடுங்குப்பிக்கேற்றே. (கரு)

ஏற்றியகளங்கஞ்செய்ய இன்னமும்சொல்வேன்கேளு, மாற்றியேவெள்ளிபொன்னு மறுவங்கம்பொன்னுமாகும், நேற்றியாண்டுஞ்சேர்த்து நிசமதாயுருக்கிச்சேரு, ஆற்றியேபொடித்துக்கொண்டு அந்தமாய்ரசத்தைச்சேரே. (கசு)

சேரேநீமுன்போலிந்தத்திட்டமாய்ப்பஞ்சபூதம், திரணைய் சேர்க்கைசேர்த்து திட்டமா யரைத்துநீரில், கிரெனுங்குழவினுள்ளே கண்டதிச்சோதிசொன்னோம், பூரமும்வீரந்தானும் புகழ்ந்திடும்வேதைகாட்டும்.

காட்டுமேசெம்புமொன்று கருதியவங்கமொன்று, மாட்டுமேரெண்டுஞ்சேர்த்து மங்காதுகளங்கமாகும், ஆட்டுவாய்ரசமொன்றிட்டு அமைந்திடவரைத்துக்கட்ட, நாட்டுவாய்பஞ்சபூதம் நலம்பெறமூட்டி நீட்டே. (க௮)

நீட்டிடன்றேன் வீரங்கால்தான் நிசமானபூரங்கால்தான், காட்டென்றேன்கம்பிரெண்டு கால்தனை நன்றாய்ப்பாரு, ஊட்டுவாய்சீனங்கால்தான் உத்தமகரியுப்பேகால்; வாட்டமாயறுநீறுலே வகைதப்பியெரித்திடாயே. (க௯)

பருதியில்பொரியைப்போல பாரிந்தவேதைசொல்லும், சிரித்திடும்சமமுமையா சிக்கெனவெழுந்துபேசும், மரித்திடுமாயன்தன்னை மகிழ்வுடன்பூசிப்போமால், உரித்திடும்வயதுபந்து முத்தமப்பொன்னிதாமே.

பொன்னென்று சொன்னபேச்சு பொருந்திநீயாலோசித்து, வன்னமாய்ச்சொல்லக்கேளு வரிசையையறைகிறேன்பார், கன்னமாம்கரியுப்பொன்று கருதியசினமொன்று, மன்னனேரெண்டுகம்பி மதித்திடும்கற்சுண்ணும்மே. (௨௰)

சுன்னமாமுருக்கினத்தின் துறையறிந்துருவைக்காண, கன்னவேமூன்றுநாளில் கருதியபுடமுந்தீர்த்து, நன்னவேராசிதம்நாகம் நலமதாய்ச்சேர்த்துக்கொ

ண்டு, அண்ணவேயிடைக்கிடைக்கி அமர்ந்திட அரைத்திடாயே. (௨௩)

அரைத்திடு அறுநீராலே ஆய்ந்திட்டுச்சுன்னமாகும், எரித்திடில்லகுபுடத்தில் இதமாகவேகமீறும், நிறைத்திட நல்லோகத்தில் நேமித்தவயதுபத்து, உரைத்திட்டேன்உலகிலுள்ள உபாயத்தைச்சொல்லொண்ணுதே. (௨௪)

சொல்லொண்ணுதிந்தச்சேதி சுருதியையுற்றுப்பாரு, வெல்லொண்ணுவேதைகாணும்விரும்பியேநன்றாய்க்கேளு, கொல்லொண்ணுதங்கமொன்று குவலயவங்கமொன்று, நில்லொண்ணுகளங்கம்போல நேமித்துவுருக்கிவாங்கே, (௨௫)

வாங்கிப்பின்ரசத்தையொன்று வளமதாய்க்கூட்டியாட்டி, ஓங்கியபங்கஞ்சாங்கி யுள்ளதுசொல்லக்கேளு, தாங்கியேசெய்தசுன்னந் தானதுஅஞ்சுபங்கு, எங்கியேபோகாமல்தான் இயம்பியஅறுநீராலே. (௨௬)

அறுநீராலாட்டியாட்டி அமர்ந்திடமூன்றுநாள்தான், சரிபெறபரியில்போட்டு தாக்கிடுலகுபுடத்தில், கரியுறஅனலில்வாட்டிக் கனம்பெற அப்பிலாகில், உரியதாய்ச்சுன்னஞ்செய்து உத்தமசெம்பிலீயே ()

செம்பினிலீந்தாலுந்தான் செகசோதிகாணுங்காணும், வம்பினில்வெள்ளிமேலே வரிசையாய்ச்சோதிகாணும், தம்பினிவரியவெள்ளித் தருசெம்புரண்டுஞ்சேர்த்து, உம்பிலன்குருவொன்றிட்டு உருக்கியேபெடுத்திடாயே. (௨௮)

எடுத்திடாயெந்தலோக மாகிலும்வரிசையித்து, அடுத்திடா யெந்தச்சுன்ன மாகிலுமறிபச்செய்வா

ர், தொடுத்திடாய்முறைதப்பாமல் சொன்னதுபஞ்சபூதம், கொடுத்திடாய்சுன்னஞ்செய்து குறியதுபத்துக்கொன்றே. (உகூ)

ஒன்றைப்போல் முறைகள்சொல்ல உயர்ந்திடுலக்ஷங்காப்பு, அன்றன்றுமுறைத்தார்முன்னோர் அதிலதில்விபரமெத்த, கண்டுநீதேறுதேறு கருதியஉப்புக்கட்டை, நன்றதாங்கெந்திசேர்த்துநலம்பெறப்புடத்தில் வாங்கே. (௩0)

வாங்குவாய்புடமுமூன்று வர்ணமோசிவப்புமாச்சு, ஏங்கிநீபோகாமற்கேள் இயங்கியரசமேசேரு,தாங்கியேகுப்பிக்கிட்டு தயவதாய்எரித்துப்பாரு; ஓங்கியேசிவந்துபோமே உத்தமகுருவென்றெண்ணே. ()

எண்ணியசுருதியெல்லாம் இயம்பியவகையைக்கேளு, தன்னியேஉப்பும் அப்புத் தயவதாய்ச்சேர்க்கச்சொல்லி, நண்ணியேமுன்னோர்சொன்ன நலமதையறிந்தீரானல், மண்ணிலேபிறந்தசென்மம் மண்ணிலேமடிந்துபோமே. (௩உ)

நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்

வகாரக்குறிப்பு (32) முற்றிற்று.